<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 48/2017 நாள்: 11.08.2025 வா.சா.1 – ராஜாமணி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் இந்த வழக்கில் எனக்காக மட்டும் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 2ம் வாதிக்காக நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். 2 ம் வாதியும், நானும் சேர்ந்து பைனான்ஸ் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நானும், 2ம் வாதியும் சேர்ந்து ஆர்.கே.ஆர் என்ற பெயரில் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பைனான்ஸ் தொழில் ஒன்றாக செய்யவில்லை என்றால் எதற்காக இரண்டு பேரும் சேர்ந்து அடமானக்கடன் கொடுத்தீர்கள் என்றால் சாட்சி என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, நான் பாதி மற்றொரு வாதி பாதி கடன் கொடுத்ததால் ஒன்றாக அடமான கடன் எழுதிக்கொண்டதாக கூறுகிறார். நாங்கள் இருவரும் சரிபாதி அடமான தொகையை கொடுத்ததாக அடமான பத்திரம் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சரிபாதி அடமான தொகை கொடுத்ததாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாசகங்கள் இல்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அடமான பத்திரத்தில் 1ம் பிரதிவாதி தரப்பினரல்ல என்றால் சரிதான். நான் வருமான வரி வருடம் வருடம் செலுத்தி வருகிறேன். என்னுடைய வருமான வரி கணக்கில் இந்த வழக்கு அடமான தொகையை கொடுத்தது சம்பந்தமான விவரங்கள் இடம்பெறவில்லை, ஏனென்றால் அது விவசாய வருமானம் என்று சாட்சி கூறுகிறார். இந்த அடமான கடன் பத்திரத்தில் 1ம் பிரதிவாதியின் மகன் K.R.தினேஷ் கடன் வாங்கியதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அடமான பத்திரம்

ஏற்பட்ட தேதியில் 1ம் பிரதிவாதி தரப்பினராகவோ, சாட்சியாகவோ கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். அடமான கடன் பத்திரம் ஏற்பட்டது பற்றி நேரடியாக 1 ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சாட்சி அதுபற்றி தெரியாது என்று கூறுகிறார். அடமான பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்து K.R.தினேஷ் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. அடமானம் ஏற்படுத்துவதற்கு முன்பாக தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பது சம்பந்தமாக மூல ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் சாட்சி பார்த்தேன் என்று கூறுகிறார். என்ன மூல ஆவணத்தை பார்த்தேன் என்றால் மேற்படி K.R.தினேஷ் தாய், தந்தை பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை பார்த்தேன். K.R.தினேஷ்–ன் தகப்பனார் வழக்கறிஞர் என்றால் சரிதான். நாங்கள் அடமான கடன் கொடுப்பதற்கு முன்பாக K.R.தினேஷ்–ன் தந்தையிடம் அவருடைய மகன் கடன் கேட்பது சம்பந்தமாக கொடுக்கலாமா வேண்டாமா என்று நாங்கள் கேட்கவில்லை. நான் K.R.தினேஷ்–ன் தந்தையிடம் கேட்டிருந்தால் தாவா சொத்து தனிப்பட்ட சொத்து அல்ல, பூர்வீக சொத்து என்று தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. அடமான பத்திரம் தவிர நான் K.R.தினேஷிடம் தாவா சொத்து சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான், ஆனால் அது வெவ்வேறு Transaction என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்து சம்பந்தமாக K.R.தினேஷ் உடன் என் மனைவி ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டார் என்றும், அதை ரத்து செய்து விட்டு நான் என் பெயரில் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினேன் என்ற விவரத்தை என்னுடைய வழக்குரையில் சொல்லாமல், முதல் விசாரணை சத்திய பிராமாண வாக்குமூலத்தில் மட்டும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். K.R.தினேஷ் Bharath Law Journals என்ற சட்ட மாத வெளீயிட்டை வெளியிட்டார் என்றால் நான் என்னுடைய வழக்குரையில் சொல்லாமல், முதல் விசாரணை சத்திய பிராமாண வாக்குமூலத்தில் மட்டும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும், அடமான கடன் நடவடிக்கை மற்றும் கிரைய ஒப்பந்த நடவடிக்கை ஆகியவை

தனித்தனியானவை என்று என்னுடைய வழக்குரையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 1 ம் பிரதிவாதி நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆவணத்தில் எங்கள் RKR பைனான்ஸ் பதிவு செய்யப்பட்ட கூட்டாண்மை நிறுவனமா, மேற்படி பைனான்ஸ் உரிமம் பெற்றுள்ள பைனான்ஸா, மேற்படி பைனான்சுக்கு நானும், கண்ணப்பனும் பங்கு தாரர்களா என்ற விவரம் கேட்டு அனுப்பியிருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். நான் அனுப்பிய பதில் அறிவிப்பான வா.சா.ஆ.4 ல் மேற்படி பைனான்ஸ் நிறுவனத்திற்கு நானும், கண்ணப்பனும், பங்கு தாரர்கள் அல்ல என்றும், பைனான்ஸ் தொழில் நடத்தவில்லை என்று குறிப்பிட்டு மறுத்து பதில் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். நடத்தாததால் அவ்வாறு சொல்லவில்லை என்று சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் யாரிடம் இருந்து பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் 2ம் பிரதிவாதியிடமிருந்து பெற்று தாக்கல் செய்தததாக சாட்சி கூறுகிறார். 2ம் பிரதிவாதி K.R.தினேஷ் இறப்பதற்கு முன்பாக 36,ராமலிங்கம் நகரில் இருந்தததாகவும், இறந்த பின்னர் 2 ம் பிரதிவாதியின் தந்தை வீடான ஆவாரங்காடு தோட்டம், செஞ்சேரிபுத்தூரில் வசித்து வந்தார். தற்போது எங்கு வசித்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கை K.R.தினேஷ் காலமான பிறகு தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது 2ம் பிரதிவாதி 36, ராமலிங்க நகரில் தான் வசித்து வந்தார். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது ராமலிங்க நகரில் வசிக்கவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீக சொத்து, K.R.தினேஷ்க்கு தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. K.R.தினேஷ் உடன் பிறந்தவர்கள் மொத்தம் 3 நபர்கள் என்றால் சரிதான். K.R.தினேஷ் ன் மூத்த அண்ணன் பிரகதீஷ் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி இரண்டு பேருக்கும் மூத்தவர் விசாகபிரபு தற்போது

உயிருடன் தான் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி விசாக பிரபுக்கு அவருடைய குடும்பத்தில் செட்டில்மெண்ட் ஆவணமோ, பாகமோ எதுவும் வழங்கவில்லை, K.R.தினேஷ்க்கு மட்டும் தான் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அடமான கடனை K.R.தினேஷ்க்கு வழங்குவதற்கு முன்பாக மேற்படி விவரங்களை அறிய விசாரணை செய்து தெரிந்து கொண்டோமா என்றால் சாட்சி K.R.தினேஷ் ன் தனிப்பட்ட வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் நாங்கள் விசாரிக்கவில்லை என்று கூறுகிறார்.

1 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.